சரக காவல் துணை தலைமை ஆய்வாளருக்கு அஞ்சல் மூலம் தகவலை அனுப்பலாம்

(D) send the information by post to the Inspector General of Police
சரக காவல் தலைமை ஆய்வாளருக்கு அஞ்சல் மூலம் தகவலை அனுப்பலாம்

56. Who is the competent authority to record any confession or statement by any person in the course of Investigation?
ஒரு வழக்கின் மீதான விசாரணையின் போது எவரேனும் ஒரு நபர் ஒப்புதல் வாக்குமூலம் அல்லது அறிக்கை செய்தால் அதனை பதிவு செய்யும் அதிகாரம் எவருக்குள்ளது?

(A) Any metropolitan Magistrate or Judicial Magistrate
பெருநகர நீதித்துறை நடுவர் அல்லது வேறு நீதித்துறை நடுவர்

(B) Chief Judicial Magistrate
தலைமை நீதித்துறை நடுவர்

(C) Additional Sessions Judge
கூடுதல் அமர்வு நீதிபதி

(D) Any Police Officer an whom any power of Magistrate is conferred
நீதித்துறை நடுவரின் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட காவல் அலுவலர்

57. Quote the provision in the Code of Criminal Procedure pertaining to report of Police Officer an completion of Investigation.
புலனாய்வு முடிவுற்றபின் ஒரு காவல் அலவலரால் தாக்கல் செய்யப்படும் இறுதி அறிக்கை தொடர்பாக குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தில் எந்த பிரிவில் கூறப்பட்டுள்ளது?

(A) Section 171
பிரிவு 171

(B) Section 172
பிரிவு 172

(C) Section 173
பிரிவு 173

(D) Section 174
பிரிவு 174

58. Every offence shall ordinarily be inquired into and tried by which Court?
சாதாரணமாக ஒரு குற்றம் குறித்து எந்த நீதிமன்றம் விசாரிக்க முடியும்

(A) any court within the State
மாநிலத்தில் உள்ள எந்த நீதிமன்றமும்

(B) any court within the District
மாவட்டத்தில் உள்ள எந்த நீதிமன்றமும்

(C) any court within the Taluk
வட்டத்தில் உள்ள எந்த நீதிமன்றமும்

(D) a court within whose local Jurisdiction the offence was committed
எந்த நீதிமன்ற அதிகார எல்லைக்குள் குற்றம் நிகழந்ததோ அந்த நீதிமன்றத்தால்

59. Which Section describes "Recording of confessions and Statements" in Chapter XII?
அத்தியாயம் XIIல் "ஒப்புதல் உறைகளையும் வாக்கு மூலங்களையும் பதிவு செய்தல்" பற்றி தெரிவிக்கும் பிரிவு எது?

(A) Section 164
பிரிவு 164

(B) Section 170
பிரிவு 170

(C) Section 175
பிரிவு 175

(D) Section 177
பிரிவு 177

60. In all trials before a Court of Session by whom the evidence of each witness shall be taken down in writing?
ஒரு அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின் போது சாட்சிகளின் சாட்சியத்தை எழுத்து மூலமாக பதிவு செய்யும் போது அந்த சாட்சியம் எவரால் பதிவு செய்யப்படும்?

(A) only by the Presiding Judge
நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியால்

(B) either by the Presiding Judge or by his dictation or under his direction by an Officer of the Court
நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியால் அல்லது அவரது வாய்மொழிப்படி அல்லது உத்தரவின்படி நீதிமன்ற அலுவலர் ஒருவரால்

(C) by the witness himself
சாட்சியால் மட்டும்

(D) by the Public Prosecutor
அரசு குற்றவியல் வழக்கறிஞரால்

61. Whether any Court may, at any stage of the inquiry or trial, examine any person as witness who is in attendance though not summoned?
ஒரு வழக்கு விசாரணையில் உள்ள போது அழைப்பாணையின்றி ஆஜராகும் ஒரு நபரை சாட்சியாக ஒரு நீதிமன்றம் விசாரிக்கலாமா?

(A) yes
ஆம்

(B) no
இல்லை

(C) yes, if his evidence appears to the Court to be essential
ஆம், அவரது சாட்சியும் அத்தியாவசியம் என்று நீதிமன்றத்திற்கு தோன்றினால்

(D) yes, if the witness is brought by the accused
ஆம், குற்றவியல் சாட்சியை அழைத்து வந்தால்

62. Which section explain about release of accused when evidence deficient in Chapter XII?
அத்தியாயம் XIIன் படி சாட்சியம் குறைவாக உள்ளதாக இருக்கும் போது எதிரியை விடுவித்தல் பற்றி கூறும் பிரிவு எது?

(A) Section 165
பிரிவு 165

(B) Section 169
பிரிவு 169

(C) Section 185
பிரிவு 185

(D) Section 195
பிரிவு 195

63. Under which provision in the Code of Criminal Procedure the Officer in-charge of a Police Station shall make investigation regarding suicidal death, homicidal death and death by accident?
தற்கொலை, இனப்படுகொலை, விபத்து இறப்பு ஆகியவை தொடர்பாக ஒரு காவல் நிலையத்தின் பொறுப்பு அலுவலர் புலனாய்வு செய்வது குறித்து குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தில் எந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Section 172
பிரிவு 172

(B) Section 173
பிரிவு 173

(C) Section 174
பிரிவு 174

(D) Section 175
பிரிவு 175

64. Whether a Police Officer is authorized to take security from the accused for his appearance before the Magistrate instead of forwarding the accused to Magistrate even though upon investigation it appears that there is sufficient evidence.
புலன் விசாரணையின் போது குற்றவாளிக்கு எதிராக போதிய சாட்சியம் இருந்தும் அவரை நீதித்துறை நடுவர் முன்னிலையில் ஆஜர் செய்யாமல் குற்றவாளியானவர் நாம் அழைக்கப்படும் போது நடுவர் முன்னிலையில் ஆஜர் செய்வதாக உறுதிமொழி கூறினால் அதனை காவல் அலுவலர் அனுமதிக்கலாமா?

(A) yes
ஆம்

(B) no
இல்லை

(C) yes, if the offence is bailable and the accused is able to give security
ஆம், குற்றத்தின் தன்மை பிணையத்தில் விடுவிக்கக்கூடியதாக இருந்து குற்றவாளி பிணையம் கொடுக்க முடிந்தால்

(D) with the permission of Magistrate
நீதிபதியின் அனுமதியின் பேரில்

65. Whether the complainant or witness on his way to any court shall be required to accompany a police officer?
ஒரு புகார் மனுதாரர் அல்லது சாட்சி நிதீமன்றத்தில் ஆஜராக செல்லும் போது காவல் அலுவலருடன்தான் செல்ல வேண்டும்?

(A) Yes
ஆம்

(B) Yes, if so directed by public prosecutor
ஆம், அரசு குற்றவியல் வழக்கறிஞர் அறிவுறுத்தினால்

(C) Yes, if so desired by that person
ஆம், அவர் விரும்பும் நிகழ்வில்

(D) No
இல்லை

66. Under what circumstances a magistrate taking cognizance of an offence need not examine the complainant?
ஒரு நீதித்துறை நடுவர் குற்றத்தினை விசாரணைக்கு ஏற்றபின் எந்த சூழ்நிலையில் அந்த புகார் மனுதாரரை விசாரிக்க வேண்டிய அவசியமில்லை

(A) If the complainant is a Public Servant acting in the discharge of his official duties
புகார் மனுதாரர் பொது ஊழியராக இருந்து அவரது அலுவல் பணி தொடர்பான விசாரணையாக இருப்பின்

(B) If the complaint is made in writing
புகார் மனு எழுத்து மூலமாக அளிக்கப்பட்டிருந்தால்

(C) If the complainant is not available
புகார் மனுதாரர் காணப்படவில்லை என்றால்

(D) If the accused is not prejudiced
குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதிப்பு இல்லை என்றால்

67. Taking cognizance of any offence is a
குற்ற வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வது என்பது

(A) Administrative action
நிர்வாக சம்பந்தப்பட்ட நடவடிக்கை

(B) Judicial action
நீதித்துறை சார்ந்த நடவடிக்கை

(C) Police investigation
காவல் துறை புலனாய்வு

(D) Quasi Judicial function
பகுதியாக நீதித்துறை சார்ந்த நடவடிக்கை

68. The Magistrate of the first class may take cognizance of any offence upon which of the following?
கீழ்கண்டவற்றில் எதன் அடிப்படையில் முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் குற்றவழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம்

(A) Upon receiving a complaint
புகார் மனு பெறப்பட்டபின்

(B) Upon a police report
காவல் அறிக்கை பெறப்பட்டபின்

(C) Upon information received from any person other than a police officer
காவல் அலுவலர் தவிர பிற நபரிடமிருந்து தகவல் பெறப்பட்டபின்

(D) Upon a complaint or a Police report or information from any person or Magistrate's own knowledge
புகார் மனு அல்லது காவல் அறிக்கை அல்லது பிற நபரிடமிருந்து பெறப்படும் தகவல் அல்லது நீதித்துறை நடுவரின் தனிப்பட்ட கவனத்தின்பேரில்

69. Mention the provision in the Code of Criminal Procedure for prosecution of Judges and public servants who are accused of any offence alleged to have been committed while acting in the discharge of their official duty
ஒரு நீதிபதி அல்லது பொது ஊழியர் தமது அலுவல் தொடர்பான கடமையாற்றும் போது குற்றம் புரிந்ததாக குற்றம் சாட்டப்பட்டால் அந்த குற்றத்தின் மீது வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்வது தொடர்பாக குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டத்தில் எந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Section 196
பிரிவு 196

(B) Section 197
பிரிவு 197

(C) Section 198
பிரிவு 198

(D) Section 199
பிரிவு 199

70. Which Section deals with prosecution for defamation?
அவதூறு வழக்கு தொடர்தல் பற்றி விளக்கும் பிரிவு எது?

(A) Section 199
பிரிவு 199

(B) Section 224
பிரிவு 224

(C) Section 245
பிரிவு 245

(D) Section 252
பிரிவு 252

71. Where a complaint has been made by a public servant under Section 195(1)(a) of the Code of Criminal Procedure who may order withdrawal of the complaint?
குவிமுச பிரிவு 195(1)(a)-ன்படி ஒரு பொது ஊழியரால் கொடுக்கப்பட்ட புகார் மனுவை திரும்பப்பெற யாருக்கு அதிகாரம் உள்ளது?

(A) any authority to which the public servant is administratively subordinate
புகார் கொடுத்த பொது ஊழியருக்கு நிர்வாக ரீதியாக உயர்நிலையில் உள்ள அலுவலர்

(B) public servant concerned
புகார் கொடுத்த பொது ஊழியர்

(C) any other public servant authorized by the public servant concerned
புகார் கொடுத்த பொது ஊழியரின் அதிகாரம் பெற்ற மற்றொரு பொது ஊழியர்

(D) public prosecutor
அரசு குற்றத்துறை வழக்கறிஞர்

72. To whom the protection under Section 197(1) of the Code of Criminal Procedure (previous section of the Government is necessary for prosecution) is applicable?
குவிமுச பிரிவு 197(1)-ன் கீழ் உள்ள பாதுகாப்பு (குற்ற வழக்கு தொடருவதற்கு அரசின் முன் அனுமதி தேவை) யாருக்கு பொருந்தும்

(A) any public servant while in the service
பணியில் உள்ள பொது ஊழியருக்கு

(B) employee of public sector undertaking
அரசுடைமையான நிறுவன ஊழியருக்கு

(C) member of the armed forces
இராணுவ பிரிவு ஊழியருக்கு

(D) any public servant while in the service or after retirement
பணியில் உள்ள அல்லது ஓய்வு பெற்ற அரசு ஊழியருக்கு

73. Which Section describes about Dismissal of Complaint in Chapter XV?
அத்தியாயம் XVல் முறையீட்டை தள்ளுபடி செய்தல் பற்றி விளக்கும் பிரிவு எது?

(A) Section 186
பிரிவு 186

(B) Section 192
பிரிவு 192

(C) Section 203
பிரிவு 203

(D) Section 210
பிரிவு 210

74. Which chapter describes 'commencement of proceedings' before Magistrate?
நடுவர்கள் முன் நடவடிக்கைகளை தொடங்குதல் பற்றி விளக்கும் அத்தியாயம் எது?

(A) Chapter VI
அத்தியாயம் VI

(B) Chapter XII
அத்தியாயம் XII

(C) Chapter XVI
அத்தியாயம் XVI

(D) Chapter XX
அத்தியாயம் XX

75. Under Section 202 of the code of criminal Procedure when a Magistrate shall direct an investigation to be made by a Police officer
குவிமுச பிரிவு 202-ன்படி புலன் விசாரணை செய்யும்படி காவல்துறைக்கு ஒரு நீதித்துறை நடுவர் எப்போது உத்தரவிடலாம்

(A) if the accused is residing at a place beyond the jurisdiction of the magistrate
குற்றவாளி வசிக்கும் முகவரி விசாரிக்கும் நீதிமன்ற எல்லைக்கு அப்பாற்பட்ட போது

(B) for the purpose of deciding the truth in the complaint
புகாரின் உண்மைத் தன்மையை தீர்மானிக்க

(C) to postpone the issue of process against the accused
குற்றவாளிக்கு எதிரான நடவடிக்கையை தள்ளி வைக்க

(D) on the request of the police officer
காவல் துறை அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க

76. When it appears to the magistrate that the offence is triable exclusively by the court of session under Section 209 of the code of Criminal Procedure whether he shall notify the Public Prosecutor before such commitment?
கு.வி.மு.ச பிரிவு 209-ன்படி ஒரு குற்றம் குறித்து அமர்வு நீதிமன்றம் மட்டுமே விசாரிக்க முடியும் என்று ஒரு நீதித்துறை நடுவருக்கு தோன்றினால் அந்த வழக்கினை அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றுமுன் நீதித்துறை நடுவர் அரசு குற்றத்துறை வழக்கறிஞருக்கு அறிவிக்க வேண்டுமா?

(A) Yes, before commitment
ஆம், வழக்கினை மாற்றுமுன் அறிவிக்க வேண்டும்

(B) Yes, after commitment only
வழக்கினை மாற்றியபின் அறிவிக்கலாம்

(C) No, after remanding the accused only
இல்லை, குற்றவாளியை சிறையில் அடைத்தபின்தான் அறிவிக்கலாம்

(D) No, after giving opportunity to the accused
இல்லை, குற்றவாளிக்கு வாய்ப்பளித்த பின் அறிவிக்கலாம்

77. When the Magistrate commits a criminal case to a court of session under section 209 of the code of Criminal Procedure what orders may be passed by the Magistrate against the accused?
நீதித்துறை நடுவர் ஒரு குற்ற வழக்கை மேல் விசாரணைக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு கு.வி.மு.ச பிரிவு 209-ன்கீழ் அனுப்பி வைக்கும் முன் குற்றவாளியை பொறுத்தவரையில் எந்தவிதமான ஆணைப் பிறப்பிக்கலாம்?

(A) shall grant bail
ஜாமீன் அளிக்கலாம்

(B) shall refuse to grant bail
ஜாமீன் அளிக்க மறுக்கலாம்

(C) shall remand
சிறையில் அடைக்கலாம்

(D) may grant bail or remand
ஜாமீன் அளிக்கலாம் அல்லது சிறையில் அடைக்கலாம்

78. Where a private complaint is filed before a magistrate and inquiry or trial is in progress and the Magistrate receives an information that the police is also investigating the same case what the magistrate shall do?
ஒரு நீதித்துறை நடுவர் முன் தனிநபர் புகார் மனு வரப்பெற்று வழக்கு விசாரணை நடந்துகொண்டிருக்கும் போது அதே புகார் குறித்து காவல் துறை புலனாய்வு மேற்கொண்டிருப்பதாக தகவல் தெரிய வந்தால் நடுவர் எந்தவிதமான ஆணை பிறப்பிக்கலாம்?

(A) stay police investigation
காவல் துறை புலன்விசாரணையை நிறுத்தி வைத்து உத்தரவிடலாம்

(B) stay proceeding before the magistrate and also call for police report
நடுவர் முன் உள்ள விசாரணையை நிறுத்தி வைத்து காவல் அறிக்கை கேட்கலாம்

(C) call for report of the police officer
காவல் அறிக்கை கேட்கலாம்

(D) stay the proceedings before the magistrate
நடுவர் முன் உள்ள விசாரணையை நிறுத்தி வைத்து உத்தரவிடலாம்

79. Whenever a magistrate issues a summon to the accused whether he may dispense with the personal attendance of the accused under section 205 of the Criminal Procedure Code?
ஒரு குற்றவாளியை தம்முன் ஆஜராகும்படி ஒரு நீதித்துறை நடுவர் அழைப்பாணை அனுப்பியபின் கு.வி.மு.ச. பிரிவு 205-ன்கீழ் குற்றவாளி நீதிமன்றத்தில் ஆஜராகுவதிலிருந்து விலக்கு அளிக்கலாமா?

(A) Yes, with permission to appear by his pleader
ஆம், வழக்கறிஞர் மூலமாக ஆஜராக அனுமதி கோரியபின் விலக்களிக்கலாம்

(B) Yes, without insisting on appearance by his pleader
ஆம், வழக்கறிஞர் மூலமாக ஆஜராக அனுமதி கோரினாலும், கோராவிட்டாலும் விலக்களிக்கலாம்

(C) No, if the pubic prosecutor objects
இல்லை, அரசு குற்றவியல் வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தால் விலக்களிக்கக் கூடாது

(D) No, if the public prosecutor objects or not
இல்லை, அரசு குற்றவியல் வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தாலும் இல்லை என்றாலும் விலக்களிக்கக் கூடாது

80. Under which provision in the code of criminal procedure any court may alter or add to any charge at any time before judgement is pronounced?
ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கும்முன் வழக்கின் எந்த நிலையிலும் குற்றச்சாட்டினை திருத்தவோ அல்லது ஒரு குற்றத்தை சேர்க்கவோ கு.வி.மு. சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் ஒரு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது?

(A) Section 215
பிரிவு 215

(B) Section 216
பிரிவு 216

(C) Section 217
பிரிவு 217

(D) Section 218
பிரிவு 218

81. To whom any Chief Judicial Magistrate may, after taking cognizance of an offence, make over the case for inquiry or trial?
ஒரு குற்றம் குறித்து தலைமை நீதித்துறை நடுவர் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பிறகு அந்த வழக்கினை வேறு எந்த நடுவருக்கு மாற்றி அனுப்பலாம்?

(A) Sessions Judge
அமர்வு நீதிபதிக்கு

(B) Additional District judge
கூடுதல் மாவட்ட நீதிபதிக்கு

(C) Any competent magistrate subordinate to him
தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு கீழ்ப்பட்ட நடுவருக்கு

(D) Magistrate of the first class
முதல் வகுப்பு நீதித்துறை நடுவருக்கு

82. The provisions in sections 225 to 237 under Chapter XVIII of the Code of Criminal Procedure Code are concerned with what procedure?
குவிமுச அத்தியாயம் XVIII-ன் கீழ் உள்ள 225 முதல் 237 வரையிலான பிரிவுகள் எந்த நடைமுறை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Procedure of trials held before the Court of Session
அமர்வு நீதிமன்றத்தின்முன் நடைபெறும் வழக்கு விசாரணை குறித்த நடைமுறை

(B) Procedure of trial held before the Court of any Magistrate
ஏதேனும் ஒரு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு விசாரணை குறித்த நடைமுறை

(C) Procedure to be followed by the Magistrate when the offence is exclusively traiable by the Court of Session
ஒரு குற்றம் குறித்து அமர்வு நீதிமன்றம் மட்டுமே விசாரிக்க முடியும் என்ற நிகழ்வில் நீதித்துறை நடுவர் பின்பற்ற வேண்டிய நடைமுறை

(D) Provision for supply of police report and other documents to the accused
குற்றவாளிக்கு காவல் அறிக்கை உள்ளிட்ட மற்ற ஆவணங்களை வழங்குதல் குறித்த நடைமுறை

83. State whether any Magistrate of Second Class may take cognizance of any offence in his discretion?
இரண்டாம் வகுப்பு நீதித்துறை நடுவர் ஒருவர் எந்த ஒரு குற்றத்தையும் தன் விருப்பத்தின்பேரில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளலாமா?

(A) No
கூடாது

(B) Yes, if specially empowered by the Chief Judicial Magistrate
சரி, தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் சிறப்பு நிகழ்வாக அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தால்

(C) Yes, if the offences are within his competence to inquire into or try
சரி, குற்றமானது அவருக்குள்ள அதிகார வரம்பிற்குள் விசாரிக்கத் தக்கதாக இருப்பின்

(D) Yes, if specially empowered by the Chief Judicial Magistrate and the offences are within his competence to inquire into and try
சரி, தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் சிறப்பு நிகழ்வாக அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தாலும் மேலும், குற்றமானது அவருக்குள்ள அதிகார வரம்பிற்குள் விசாரிக்கத் தக்கதாக இருப்பினும்

84. If the magistrate is of the opinion that there is no sufficient ground for proceeding on a complain whether he shall summarily dismiss the complaint under section 203 of the code of Criminal Procedure?
ஒரு புகாரின்மேல் விசாரணை தொடர போதிய ஆதாரம் இல்லை என ஒரு நீதித்துறை நடுவர் கருதினால் குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் பிரிவு 203-ன்படி புகார் மனுவை சுருக்கு முறையில் தள்ளுபடி செய்யலாம்?

(A) Yes before examining the accused
ஆம், குற்றவாளியை விசாரிக்கு முன்

(B) Yes, after summoning the accused
ஆம், குற்றவாளியை விசாரித்தபின்

(C) Yes, after examining the complainant and witness and considering the result of investigation under section 202
ஆம், புகார் மனுதாரர் மற்றும் குற்றாவளியை விசாரித்தும் பிரிவு 202-ன் கீழ் புலனாய்வு அறிக்கையின் முடிவினை அறிந்தும்

(D) No
இல்லை

85. What is meant by "petty offence" for the purpose of section 206(1) of the Code of Criminal Procedure?
குற்றவியல் விசாரணை முறைச் சட்டத்தின் 206(1)-பிரிவின் நோக்கத்திற்காக "சிறுவழக்கு" என்பது எந்த குற்றத்தைக் குறிக்கும்?

(A) Any offence punishable with fine not exceeding one thousand rupees but does not include any offence punishable under the Motor Vehicles Act or any other law which provides for convicting the accused
ரூ. 1000-க்கு மேற்படாமல் அபராதம் விதிக்க தகுந்த குற்றம் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் அல்லது பிற சட்டத்தின் கீழ் குற்றவாளியை தண்டிக்க தகுந்த குற்றம் இதற்கு பொருந்தாது

(B) Any offence punishable with a fine not exceeding one hundred rupees
ரூ. 100-க்கு மேற்படாமல் அபராதம் விதிக்க தகுந்த குற்றம்

(C) Any offence punishable with a fine not exceeding two hundred rupees
ரூ. 200-க்கு மேற்படாமல் அபராதம் விதிக்க தகுந்த குற்றம்

(D) Any offence punishable with a fine not exceeding five hundred rupees
ரூ. 500-க்கு மேற்படாமல் அபராதம் விதிக்க தகுந்த குற்றம்

86. If the complaint in writing is made to a Magistrate who is not competent to take cognizance of the offence what is the procedure to be followed?
விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் அதிகாரம் இல்லாத நீதித்துறை நடுவரிடம் எழுத்து மூலமான ஒரு குற்ற புகார் கொடுக்கப்பட்டால் பின்பற்றப்படும் நடைமுறை என்ன?

(A) The Magistrate shall return the complaint for presentation to the proper court with an endorsement to that effect
அந்த புகார் மனுவை உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்படி மேற்குறிப்பு செய்து மனுதாரருக்கு நடுவர் அனுப்பவேண்டும்

(B) The Magistrate shall transmit the complaint to the proper court
மனுவினை உரிய நீதிமன்றத்திற்கு நடுவர் அனுப்பி வைக்கலாம்

(C) Magistrate may direct the complainant to withdraw the complaint
மனுவினை திரும்ப பெறும்படி புகார் மனுதாரருக்கு நடுவர் கட்டளையிடலாம்

(D) The Magistrate may dismiss the complaint
புகார் மனுவை நடுவர் தள்ளுபடி செய்யலாம்

87. Mention the provision in the Code of Criminal Procedure which pertains to the contents of charge
கீழ்க்கண்ட குவிமுச பிரிவுகளில் எந்த பிரிவின்படி குற்றச்சாட்டுரை பற்றி வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) Section 210
பிரிவு 210

(B) Section 211
பிரிவு 211

(C) Section 212
பிரிவு 212

(D) Section 213
பிரிவு 213

88. Mention the provision in the Code of Criminal Procedure which prescribes the Form of Record to be maintained in a summary trial by a Magistrate
ஒரு வழக்கு ஒரு நடுவரால் சுருக்கு முறை விசாரணை செய்யப்படும்போது பராமரிக்கப்பட வேண்டிய படிவம் குறித்து குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் எந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Section 261
பிரிவு 261

(B) Section 262
பிரிவு 262

(C) Section 263
பிரிவு 263

(D) Section 264
பிரிவு 264

89. State the procedure to be followed in Summary Trials
சுருக்கு வழக்கு விசாரணையில் எந்த நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்?

(A) Summon-case procedure
அழைப்பாணை வழக்கு நடைமுறை

(B) Warrant case procedure
பிடியாணை வழக்கு நடைமுறை

(C) Summon-case procedure with the restriction that term of sentence of imprisonment shall not exceed three months
சிறைதண்டனை மூன்று மாதங்களுக்கு மேற்படாமல் விதிக்கலாம் என்ற கட்டுப்பாட்டுடன் அழைப்பாணை வழக்கு நடைமுறை

(D) Judicial proceeding
நீதித்துறை நடைமுறை

90. Which Judicial Authority is empowered to try in a summary way offfences not punishable with death or imprisonment for life or imprisonment for a term exceediog two years?
மரணதண்டனை, ஆயுள் தண்டனை அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு சிறை தண்டனை ஆகிய தண்டனைகளுக்கு உட்படாத குற்றம் குறித்து சுருக்கு முறையில் விசாரணை நடத்த எந்த நீதித்துறை நடுவருக்கு அதிகாரம் உள்ளது?

(A) Chief Judicial Magistrate, Metropolitan Magistrate and Magistrate of the first class specially empowered by High Court
தலைமை நீதித்துறை நடுவர், பெருநகர நீதித்துறை நடுவர் மற்றும் உயர் நீதிமன்றத்தால் சிறப்பு நிகழ்வாக அதிகாரம் அளிக்கப்பட்ட முதல் வகுப்பு நீதித்துறை நடுவர்

(B) Sessions Judge
அமர்வு நீதிபதி

(C) Chief Judicial Magistrate
தலைமை நீதித்துறை நடுவர்

(D) Magistrate of second class
இரண்டாம் வகுப்பு நீதித்துறை நடுவர்

91. The disposal of cases by method of 'plea of bargaining' under section section 265A of the Code of Criminal Procedure shall apply to which of the following offences
குவிமுச பிரிவு 265(ஏ)-ன் கீழ் குற்றவியல் கீழே குறிப்பிட்டுள்ள குற்றங்களில் எது "நடைமுறை குறியீட்டின் கீழ் பேரம் பேசுதல்" என்பது கீழே குறிப்பிட்டுள்ள குற்றங்களில் எதற்கு பொருந்தும்

(A) An offence for which the punishment of death is provided
மரண தண்டனை விதிக்கக் கூடிய குற்றத்திற்கு

(B) An offences for which the punishment of imprisonment for life is provided
ஆயுள் தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்திற்கு

(C) An offences for which the punishment of imprisonment for a term exceeding seven years is provided
ஏழு ஆண்டுகளுக்கு மேல் சிறை தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்திற்கு

(D) An offence other than an offence for which the punishment of death or imprisonment for life or imprisonment for a term exceeding seven years is provided
மரண தண்டனை, ஆயுள் தண்டனை ஏழு ஆண்டுகளுக்கு மேல் சிறை தண்டனை விதிக்கக் கூடிய குற்றம் அல்லாத ஒரு குற்றத்திற்கு

92. Who can file an application for 'plea bargaining' under section 265 B in the Court in which an offence is pending for trial?
ஒரு வழக்கு ஒரு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 265 (பி)-ன் கீழ் "நடைமுறை குறியீட்டின் கீழ் பேரம் பேசுதல்" என்னும் மனுவினை எவர் கொடுக்க முடியும்?

(A) a witness
ஒரு சாட்சி

(B) the person accused of an offence
குற்றம் சாட்டப்பட்டவர்

(C) the complainant
புகார் மனுதாரர்

(D) the Police officer who has forwarded the report
அறிக்கை தாக்கல் செய்த காவல் அலுவலர்

93. In which case a Magistrate of the first class or any other Judicial Magistrate may stop the proceedings at any stage without pronouncing any judgment under Section 258 of the Code of Criminal Procedure?
குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 258–ன் கீழ் எந்த வழக்கில் ஒரு முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் அல்லது வேறு ஒரு நீதித்துறை நடுவர் வழக்கு எந்த நிலையில் இருந்தாலும் தீர்ப்புரை வழங்காமல் விசாரணையை நிறுத்தி வைத்து உத்தரவிடலாம்?

(A) Summary case
சுருக்குமுறை வழக்கு

(B) Warrant case
பிடியாணை வழக்கு

(C) Summary case instituted otherwise than upon complaint
புகார்மனு அடிப்படையில் அல்லாமல் மேற்கொள்ளப்படும் சுருக்கு முறை வழக்கு

(D) Bailable case
பிணை வழங்கக் கூடிய வழக்கு

94. In a summons-case, whether the Magistrate may permit the complainant to withdraw his complaint against the accused at any stage before a final order is passed?
ஒரு அழைப்பாணை வழக்கில் இறுதி ஆணை பிறப்பிக்கும் முன் வழக்கு எந்த நிலையில் இருந்தாலும் புகார் மனுவை மனுதாரர் திரும்ப பெற விரும்பினால் நீதித்துறை நடுவர் அனுமதிக்கலாமா?

(A) No
இல்லை

(B) yes
ஆம்,

(C) Yes with the consent of the Pubic Prosecutor
ஆம், அரசு குற்றவியல் வழக்கறிஞரின் ஒப்புதலுடன்

(D) Yes, if there are sufficient grounds for such withdrawal
ஆம், திரும்ப பெறுவதற்கு போதிய காரணம் இருந்தால்

95. What is meant by a "Police report" under Section 2 (r) of the Code of Criminal Procedure?
காவல் அறிக்கை என்பது கு.வி.மு.ச. பிரிவு 2(ஆர்)-ன்படி எவ்வாறு பொருள் கொள்ளப்படும்?

(A) Complaint given by a Police Officer to a Magistrate
நீதித்துறை நடுவருக்கு காவல் அலுவலர் அளிக்கும் புகார் மனு

(B) A report forwarded by a Police officer to a Magistrate under Section 173(2) Cr.P.C.
கு.வி.மு.ச. பிரிவு 173(2)-ன்படி நீதித்துறை நடுவருக்கு ஒரு காவல் அலுவலர் அனுப்பி வைக்கும் அறிக்கை

(C) Investigation by a Police officer
காவல் அலுவலரின் புலனாய்வு

(D) Judicial proceedings
நீதித்துறை நடவடிக்கைகள்

96. State whether a Magistrate who finds the accused not guilty he may record an order of acquittal under section 255(1) of the Code of Criminal Procedure
குற்றவாளியை குற்றமற்றவர் என்று ஒரு நடுவர் கண்டறிந்தால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 255(1)–ன்படி அவரை விடுதலை செய்யலாமா?

(A) No
கூடாது

(B) Yes
ஆம்

(C) Yes, on the basis of Police report
ஆம், காவல் அறிக்கையின் பேரில்

(D) Yes, if he has taken evidence under section 254
ஆம், பிரிவு 254–ன் கீழ் சாட்சியம் பதிவு செய்து இருந்தால்

97. Quote the enabling provision in the Code of Criminal Procedure for disposal of petty cases without the presence of the accused in the Court where the accused desires to plead guilty and tenders the amount of fine specified in the summon through a letter or through the pleader authorized by him
ஒரு சிறு வழக்கில் குற்றவாளி நிதிமன்றத்தின் முன் தோன்றாமல் குற்றத்தை ஒப்புக்கொண்டு அழைப்பாணையில் குறிப்பிட்ட அபராதத்தை தனது கடிதத்துடன் அல்லது அவரது அதிகாரம் பெற்ற வழக்கறிஞர் மூலமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் குற்றவியல் விசாரணை முறைச் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் அந்த வழக்கை முடிவு செய்யலாம்?

(A) Section 251
பிரிவு 251

(B) Section 252
பிரிவு 252

(C) Section 253
பிரிவு 253

(D) Section 254
பிரிவு 254

98. When in a summons-case the accused appears before the Magistrate, whether it is necessary to frame a formal charge under section 251 of the Code of Criminal Procedure?
ஒரு அழைப்பாணை வழக்கில் குற்றவாளி நடுவர் முன் ஆஜரானால் குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் பிரிவு 251-ன்படி அவர் மீது குற்றச்சாட்டு ஏற்படுத்த வேண்டியது அவசியமா?

(A) No, The particulars of the offence shall be stated to the accused and he shall be asked whether he pleads guilty or has any defense to make
அவசியமில்லை, குற்றத்தின் விபரத்தை குற்றவாளிக்கு தெரிவித்து அவர் குற்றத்தை ஒப்புக் கொள்கிறார் அல்லது தற்காப்பு விளக்கம் அளிக்கிறாரா என்று கேட்க வேண்டும்

(B) Yes
ஆம்

(C) Yes, if the accused does not appear
ஆம், குற்றவாளி ஆஜராகாவிட்டால்

(D) No, if not pressed by the Public Prosecutor
இல்லை, அரசு குற்றத்துறை வழக்கறிஞர் வலியுறுத்தவில்லை என்றால்

99. Where in a summons-case the accused desires to plead guilty without appearing before the Magistrate and transmit a letter containing his plea together with the fine specified in the summon whether the Magistrate may acquit or convict the accused?
ஒரு அழைப்பாணை வழக்கில் குற்றவாளி நடுவர் முன் ஆஜராகாமல் குற்றத்தை ஒப்புக்கொண்டு அழைப்பாணையில் குறிப்பிட்ட அபராதத்தை தனது கடிதத்துடன் அனுப்பினால் நடுவர் குற்றவாளியை குற்றத்திலிருந்து விடுவிக்கலாமா அல்லது தண்டிக்கலாமா?

(A) The Magistrate may, in his discretion, convict the accused in his absence and sentence him to pay fine specified in the summon
குற்றவாளி ஆஜரில் இல்லாவிட்டாலும் நடுவர் தனது முடிவின்படி குற்றவாளியை தண்டித்து அழைப்பாணையில் குறிப்பிட்ட அபராதத்தை விதித்து தண்டனை வழக்கலாம்

(B) The Magistrate may require the personal appearance of the accused before him
குற்றவாளியை நடுவர் முன் ஆஜராகும்படி நடுவர் கோரலாம்

(C) The Magistrate may require the appearance of a pleader authorized by the accused
குற்றவாளியின் அதிகாரம் பெற்ற வழக்கறிஞர் ஆஜராக நடுவர் கோரலாம்

(D) The Magistrate may acquit the accused by accepting the fine
குற்றவாளி செலுத்திய அபராதத்தை ஏற்று அவரை நடுவர் விடுவிக்கலாம்

100. If in a Warrant Case instituted on a Police Report , the Magistrate, upon considering the Police Report and the documents and after giving opportunity of being heard to the prosecution and the accused, considers the charge against the accused to be groundless what kind of order he shall pass?
காவல் அறிக்கையின் அடிப்படையில் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஒரு பிடியாணை வழக்கில் காவல் அறிக்கை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், திரிக்கும் அரசு குற்றத்துறை வழக்கறிஞருக்கும் வாய்ப்பு கொடுத்த பிறகும் எதிரிக்கு எதிரான குற்றம் ஆதாரமற்றது என்று ஒரு நீதித்துறை நடுவர் கருதினால் எந்தவிதமான ஆணையை அவர் பிறப்பிக்கலாம்?

(A) He may give further opportunity to the Public Prosecutor informing his decision
நடுவர் தமது முடிவினை அரசு குற்றத்துறை வழக்கறிஞருக்கு தெரிவித்து அவருக்கு மேல் வாய்ப்பு அளிக்கலாம்

(B) He may direct the police to make fresh investigation
புதிதாக புலன் விசாரணை செய்யும்படி காவல் அலுவலருக்கு கட்டளையிடலாம்

(C) He shall discharge the accused
குற்றவாளியை குற்றத்திலிருந்து விடுவிக்கலாம்

(D) Quash the Police report
காவல் அறிக்கையை ரத்து செய்யலாம்